உ

கணபதி துணை.

# விஷப்பிரதிவிஷத்திரட்டு.

சுந்தரானந்தர் செய்த

## ஆயுள்வேதப் பொதுலக்ஷணம்.

திருமூலர்

## நாடியந்தாதி.

இவை,

சிற்றூர்

ஆயுள்வேதசபையாரிலொருவராகிய

தில்லையம்பூர்ச்

சந்திரசேகரகவிராசபண்டிதரவர்களால்

ஆராய்ச்சிசெய்யப்பட்டு

ஷைசபையாரால்

கலாநிதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

ஆங்கீரச ௵ மார்கழி மீ

இதன்விலை அணா—௪.

Registered Copyright.

# விளம்பரம்.

இந்தப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் பெத்துநாயகன் பேட்டை நயனப்ப நாயகன்தெரு-௧௧௭ வது கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் அமாந்தம் பொன்னுசாமி செட்டியாரிடத்திலும், சிற்றூர் ஆயுள்வேத சபையாரிலொருவராகிய தி-சந்திரசேகர கவிராஜபண்டிதரிடத்திலும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

திருமூலர்நாடியந்தாதியில் தாதுலக்ஷண மாத்திரம் வைத்தியர்களுக்கு அவசியம் வேண்டுவதாகையால் அதுவரையில் அச்சிட்டனம்.

S. 3

# சாத்துகவிகள்.

இஃது
இராஜதானி
வித்தியாசாலையில் தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய
இயற்றமிழாசிரியராகிய
திருத்தணிகை
**விசாகப்பெருமாளையரவர்கள்**
இயற்றிய
நேரிசையாசிரியப்பா.

சீருற்றோங்கிய நீருலகத்தினில்
காரணனியற்றிய வோரிருதிணைகளுள்
வீடுபேற்றிற் கிடதாகிய
மாக்கடமக்கே போக்கறுமாயுள்
வேதமோதிய நீதநுமுதல்வன்
அருள்வழிப்பட்ட தெருளுறுமறிஞர்
பற்பலநூல்களைப் பாங்குடனியற்றி
அப்பெருநூல்களு ளெப்பிணிகளுக்கும்
உததியிற்றோன்றிய வுயிர்தருமருந்தினை
இதமுறுமருந்தை யியம்பினர்பின்னும்
நிலைத்திணையியங்கு திணையஃதென்னும்
உலைத்திடுவிடமிரண் டுண்ணிலைத்திணையி
னுல்வருமிடர்க்குக் காலனுமாற்றை
அறையும்விடப்பிர திவ்விடநூலையும்
விதியுணர்விக்கும் பொதுலக்ஷணத்தையும்
பெருநூலுணர்ந்த திருமூலர்நாடியும்
எந்நூல்களிவை யேற்றமென்றோர்ந்தே
பன்னூல்களுமுணர் புன்புறுகவிஞன்
சிற்றூராயுள் வேதசங்கத்தின்
உற்றபுலவ னுகவோங்கிய
சந்த்ரசேகரகவி ராஜபண்டிதனெனும்
சுந்தரக்கவிஞன்றெருத்து
விந்தையாயச்சில் விளக்கினன்மாதோ.

# சாத்துகவிகள்.

இஃது

சிற்றூர்ஜில்லா

அரைத்தனபாடசாலைகளின் விசாரணைக்கர்த்தராகிய

நெல்வேலி

## முருகேசமுதலியாரவர்களியற்றிய

### கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புவிராயதிருத்தில்லையம்பூர்ச்சந்திர
   சேகரனெண்புகழ்பூத்தவியற்பேர்வாய்ந்த
கவிராயபண்டிதன்னல்லாயுள்வேதர்
   கழறவிடப்பிரதிவிடம்பொதுநூலாதி
அவிராதவனைநிகர்த்துவழூஉக்களைந்தே
   அச்சிலிடுவித்தனனுலகில்சான்றோர்
இவிராதகம்பனொட்டக்கூத்தனுதி
   இவர்முன்னுறின்மின்மினிபோலவிழிவர்தாமே. (க)

உலகில்வளர்மானிடப்பயிர்தழைத்தொப்பிலா
   உயர்ஞானபயனையடைய
உண்மைசேர்சீவகாருண்ணியப்பெருமழை
   பொழிந்திடையிலுற்பத்தியாய்
அலகில்துயர்செய்பிணிக்களைநீக்கமணிமந்தி
   ரௌடதக்களமர்தம்மால்
அணிமாதிசித்திபெற்றிடுமறிஞர்கருணைகூர்ந்
   தழகுசேர்பொதுலட்சணம்
இலகுவிடப்பிரதிவிடமெனுங்காவிய
   மியற்றினர்பாவினனைதயோர்ந்
தேதங்களைந்தாயுள் வேதச்சபைத்தலைவர்
   இச்சித்தபடியச்சினில்
பலர்புகழ்த்தில்லையம்பூர்ச்சந்திரசேகர
   கவிராஜமாபண்டிதன்
பானுகிரணம்போலயாவருமுணர்ந்திடப்
   பதித்துவெளியாக்கினனரோ (உ)

இஃது - பொன்விளைந்தகளத்தூர்
சங்கீதசாகித்திய வித்வாமிசராகிய
இராமசாமி உபாத்தியாயர் குமாரர்

## கோவிந்தநாயகரால்

இயற்றப்பட்ட

### நேரிசையாசிரியப்பா.

உலகெலாம்பரவு மொருதனிமுதல்வன்
உயர்வறவுயர்ந்தோ னயர்வறுத்தருளும்
புலப்பகையில்லா நலப்பெருநிலததோன்
பாபத்தால்வருந் தாபத்ரயத்தின்
சோபத்தைநீக்கு மாபத்பாந்தவன்
அகணிதஞான வகண்டாகாரன்
அடிநடுமுடிவிலன் படிபுனலெரிகால்
வானுமிவற்றிற் றுணையிலங்குந்
தனுஅதுமகிமை வினவியுமறிதற்
கவாங்மநகோசர னவாவறுத்தாளு
நித்தியனிர்ம்மலன் தத்துவமூல
காரணனான நாரணனருளால்
முதுணர்ந்தோர்க ளோதுபன்னூல்கள்
மன்பதைதழைக்க அன்பதைக்கொண்டு
அறைந்தனரவற்றுட் சிறந்திடுமாயுள்
வேதமென்னு மோதநீர்க்கடலின்
இலாபங்கண்டு சலாபங்குளித்துச்
சீராய்ந்தெடுத்த நீராரறுபான்
மணியெனவினமக்கு மணிதிகழும்வெண்
பாவிலமைந்து பூவுறுபொருளை
இயற்கையானுஞ் செயற்கையானும்
உண்டமாந்தர் கொண்டவிடத்தால்
மன்னுயிர்க்குற்ற வின்னைத்தீர்க்க
வெல்விஷப்பிரதி விஷத்திரட்டென்னு
நல்விஷயத்வதச் சொல்லுநூலையும்
போதுலக்ஷணமா முதநூறன்னையு
திருமூலராகிய திருமூலநாடியும்
மொழியவந்தாதின் வழுவறக்களைந்து
கெழீஇயபொருளை வழியறிந்துணரக்
கற்றசனறுன் பெற்றபயனை

எல்லோரும்பெற வல்லோர்மதிக்க
உச்சிதமான வச்சிலியற்றினன்
சிற்றூராயுள் வேதசபைக்கொரு
உற்றதுணைவ னாகவோங்கிய
செய்யவனுலவுஞ் செய்வராலுகளும்
அம்பொழிற்றில்லை யம்பூர்வாசன்
சிவனடிபணியுஞ் சிவகுருநாதன்
செய்தவப்பயனால் வய்யகத்துதித்த
சந்திரசேகர சுந்தரமிருகவி
ராஜபண்டிதனல் ராஜதானியின்
சிற்றூர்ஜில்லா விற்பொருவில்லாப்
பாடசாலையி லீடறுமியற்றமிழ்
ஆசிரியச்சொலு மாசிரியன்
நேயர்சகாயன் தூயநாவலனே.

இஃது - துரைத்தனத்தாரோற்படுத்திய
திருப்பத்தூர் ஆற்காடுத்தாலூக்காப் பாடசாலைகளில்
தமிழ்ப்பண்டிதராயிருந்த
காஞ்சிபுரம்,

## கோவிந்தமுதலியாரியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

திருமலிமாந்தரின் பெருவலியதனைப்
போக்கமருந்துகூர் மீக்கொளுமாயுள்
வேதமோதிய தீசருமுன்னோர்
ஆய்ந்தெடுத்துரைத்த வேய்ந்தநூலதனுள்
சராசரமென்னச் சாற்றிருவிடத்தில்
அசரவிடத்தி லயர்வோர்தமக்கு
மாற்றுமருந்தின் கூற்றையுரைக்கும்
விடப்பிரதிவ்விட மென்னுநூலையும்
அடற்பெருபொதுவிதி யறையுநூலையும்
அச்சிலியற்றென வாயுள்வேதத்தின்
மெச்சிடுசபையார் வேண்டுகோளின்படி
எல்லையெலாம்புகழ் தில்லையம்பூர்வாழ்
சந்திரசேகர கவிராஜபண்டிதன்
பந்தமாமச்சிற் பதித்தனன்மாதே.

சாத்துகவிகள் முற்றிற்று.

# அரும்பதப்பொருளகராதி.

| | |
|---|---|
| அங்கனை | பெண் |
| அடலை | சாம்பல் |
| அடுகை | காய்ச்சுதல் |
| அட்டு-காய்ச்சி, சமைத்து. | |
| அமலை | சோறு |
| அம்புயம் | தாமரை |
| அரம்பை | வாழை |
| அருணம் | எலுமிச்சை |
| அருக்கல்-சுண்டக்காய்ச்சல் | |
| அவுரி | நீலி |
| ஆக்கிநேயம் | விபூதி |
| ஆடகம் | துவரை |
| ஆண்டு | வருஷம் |
| ஆமலகம் | நெல்லி |
| ஆயுள்வேதம் | வைத்தியநூல் |
| ஆரல் | கார்த்திகை |
| ஆருவம் | தண்ணீர் |
| ஆன்பால் | பசுவின்பால் |
| இதல் | சவுதாரி |
| இயற்கை | சுபாவம் |
| இருந்தை | மரக்கரி |
| இருவங்கம் வெள்ளீயம்காரீய | |
| இன்னா | துன்பம் [ம் |
| ஈட்டல் | சம்பாதித்தல் |
| ஈருள்ளி | வெங்காயம் |
| உஞற்றல் | செய்தல் |
| உயர்புடம | பெரும்புடம் |
| உவரிநீர் | உப்புநீர் |
| உவர் | உப்பு |
| உள்ளம் | உள்ளான் [டை |
| ஊஞ்சற்பட்டைசீக்கிராம்பட் | |
| ஊனுன் | ஓர்கொடி |
| எகினத்திலை | புளியிலை |
| ஏரண்டம் | ஆமணக்கு |
| ஏனம் | பன்றி |
| ஐயவி | கடுகு |

| | |
|---|---|
| ஓகை | சந்தோஷம் |
| ஓடதி | மூலிவகை |
| கடு | கடுக்காய் |
| கதலி | வாழை [கு |
| கந்தம், கிழங்கு, கருணைக்கிழங் | |
| கபிஞ்சலம் | காடை |
| கரும்பூலிலை கறுப்புப்பூலாவி | |
| கலினி | திப்பிலி [லை |
| கறி | மிளகு |
| கன்னல், நாழிகை, கரும்பு [ம் | |
| கன்னற்கட்டி-கரும்புவெல்ல | |
| கன்னி | வாழை |
| காரவல்லி | பாகற்செடி |
| காராடு | வெள்ளாடு |
| கால் | காற்று |
| குக்குடம் | கோழி |
| குடிஞைப்புன்கு - ஆற்றுப்பு | |
| குடிநீர் | கஷாயம்[ன்கு |
| குல்லை | துளசி |
| குய் | தாளிப்பு [கி |
| கூழ்ப்பாண்டம்-பூசுணி-பரங் | |
| கொடுவேலி | சித்திரமூலம் |
| கோமயம் | சாணம் |
| கோமளம் | பசு |
| கோரக்கர்மூலி-கஞ்சா | |
| கோற்றேன் | கொம்புத்தேன் |
| சம்பீரம் | எலுமிச்சை |
| சாகினி | சிறுகீரை |
| சாலி | நெல் |
| சிக்குரு | முருங்கை |
| சித்திரபானு | சூரியன் |
| சிற்றம்மான்பச்சரி-சிறு அம்மான் பச்சரிசி | |
| சினம் | படிக்காரம் |
| சுண்டி | சுக்கு |
| சுரபி, சுரை | பசு |

| | | | |
|---|---|---|---|
| சுருதிநாயகன்-கடவுள் | | புளிநடலை | புளியரணை |
| செங்காஞ்சி | சிவப்பு மணித் தக்காளி | பேரரத்தை | திம்பராஷ்டம் |
| செணிகை | கடலை | பொரிகாரம் | வெங்காரம் |
| தசை | மாமிசம் | மருதோன்றி | ஐவணச்செடி |
| தருக்குபுடம் | குறைந்தபுடம் | மரை | தாமரை |
| திலம் | எள் | மாடம் | உளுந்து |
| துய்க்கல் | சாப்பிடல் | முந்நாள் | மூன்றுநாள் |
| துருசு | மயிற்றுத்தம் | முயங்கல் | கலத்தல் |
| தேள்மீன் | தேளிமீன் | மூலம்-கிழங்கு-வேர் | |
| தைதவேளை | நல்வேளை | மேதி | எருமை |
| தொடக்கு | திட்டு | வருக்கை | பலா |
| தொடி | ஓர்பலம் | வாரணத்தண்டம் - கோழிமுட்டை | |
| நங்கை | பெண் | விடத்தேரை | விடத்தாரி |
| நறுநெய் | பசுவினெய் | விடுதல் | நீங்கல் |
| நாகேசுரம் | சிறுநாவற்பூ | வெள்ளுள்ளி-வெள்ளைப்பூண்டு | |
| நிசி | மஞ்சள் | வெள்ளை | வெள்ளாடு |
| பஞ்சதாரை | சருக்கரை | வேய் | மூங்கில் |
| படிறு | பொய் | வை | வைக்கோல் |
| பதம்-சோறு- நாழிகை | | | |

## அரும்பதப்பொரு ளகராதி - முற்றிற்று.

தூரதேசத்தி லிருப்பவர்களுக்கு இப்புத்தகம் வேணடுமாயின் அரையணாத்தபால் முத்திரையாவது; மணி ஆர்டராவது அனுப்புவதுமன்றிப் புத்தகக்கிரயத்துடனே ஒரு அணாத்த பாற்கூலியும் தபால்முத்திரை யனுப்புவோர்,ரூபாய்ஒன்றுக்கு அரையணா வட்டமுங்கூட்டி யனுப்பவேண்டியது.பன்னிரண்டுபுத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ஒருபுத்தகம் விலையின்றிக்கொடுக்கப்படும். பன்னிரண்டுபத்தகங்களுக் குறைந்து வாங்குகிறவர்களுக்கு மேற்கண்ட நிபந்தனையில்லை.

### உடனே அச்சிடும் புத்தகங்கள்.

நாடி, சுத்திமுறையோடுகூடியசுமார்-ச0-பாரமுள்ளவைத்திய அட்டவணை.

வைத்திய அகராதி.

அகத்தியர்கஷாயவெண்பா ௱

முன்னிருந்த பிழைகளைத்திருத்தி அதனுடன் நூற்றறுபதுவிஷயங் கூடச்சேர்த்திருக்கிற வருஷாதிநூல்.

உ

சிவமயம்.

# விஷப்பிரதிவிஷந்திரட்டு.

## காப்பு - வெண்பா.

### கணபதிதுதி.

சீரார் கரிமுகத்துச் செம்ம லடிபணிவாம்
பாரார் விஷத்தின் பகைவிஷத்தை—நேராப்
பகர வெமக்குநற் பண்பளித்து மேலாந்
தகைதருக வேண்டுமெனத் தான். (௧)

### பரசிவ வணக்கம்.

சித்தர்பன் னூலிற் றெரித்துரைத்த தீயநஞ்சம்
அத்தனைக்கு மாற்றை யறிந்தெடுத்து—இத்தரையில்
அந்தாதி யாக வறையவே யைம்முகன்றாள்
நந்தாத் துணையா நமக்கு. (௨)

### நூற்பெருமை.

உலகத் துதித்தநான் கோடதிக ளுள்ளும்
பலபொருள்க ளுள்ளும் பகையா—நிலவும்
இயற்கை செயற்கையா மின்னுவின் மாந்தர்
உயற்குவகை நூலிதென்றே யோது. (௩)

### எட்டிக்கொட்டைக்குமாற்று.

எட்டிதின் றோர்கட் கெழினுவற் பட்டைதனைத்
தட்டியரைத் தேகொடுக்கத் தான்றீரும்—வட்ட
மனைக்கிழங்கா மூனுனின் வானிலையின் சாறும்
ஒருக்கடுக்காய் நற்குடிநீ ரோது. (௪)

ஓதவுரி வேர்த்தோ லுடனரைத்துக் கொள்ளப்போம்
தீதிலா வெற்றிலையுந் தீர்த்துவிடும்—மாதேகேள்
வெந்தயமு நன்மிளகும் வெந்நீரி லேயரைத்து
அந்தவெண்ணெ யிட்டருந்தப் போம். (௫)

### ஊமத்தைக்குமாற்று.

போமேயூ மத்தைபுசித்தால் மனைக்கிழங்கைத்
தேமேவு காடிவிட்டுத் தின்னப்போம்—ஆமவுரி
வேராகும் வாந்தி விழவருந்தி வெள்ளழிஞ்சில்
வேரருணச் சாற்றிலரைத் துண். (௬)

## அலரிவேர் நல்லெண்ணெய்க்கு மாற்று.

உண்ணலரி யெள்ளெண்ணெ யூற்றியவைத் துண்டோர்க்கு
வண்ணகடு கின்குடிநீர் வாட்டுமே—நண்ணும்
முடிமேன் முடிக்கிழங்கை மூட்டிடுவெந் நீரில்
அடியார் தருசுமுண்ணச் சொல். (எ)

## சுண்ணாம்புக்கும் வாளத்துக்குமாற்று.

சொல்லுவாய் சுண்ணத்தைக் கொண்டோர்க்குத் தூயதாம்
நல்லமஞ்ச ளாமேதி நன்மோரோ—வெல்லரிய
வாளந் தனக்காம் வசம்பி னடையுமாம்
நீள்புளிக்கோ தின்னிறு நேர். (அ)

## மருதோன்றிக்கும், நுங்கிற்குமாற்று.

நேரா மருதோன்றி நீள்திலத்தி னெண்ணெயுடன்
நேரவரைத் துண்டக்கா னீகேளு—வார்குழலாய்
தான்றிக்காய் நற்குடிநீர் தானருகு நுங்கினுக்குப்
போன்றுபெருங் காயம் புகல். (க)

## எருக்கம்பாலுக்கு மாற்று.

புகலெருக்கம் பாலுக்குப் பொற்புடைய வெள்ளும்
தகவுடைய சர்க்கரையுந் தானும்—மிகுபருத்தி
வானிலையிற் காடிதனை வார்த்தரைத்துக் கொள்ளப்போம்
சீர்கிசியே ரண்டநெய்யாஞ் செப்பு. (௧0)

## அபினிக்கு மாற்று.

செப்புவாய் நல்லபினி தின்றோர்க்கு நெய்யாகும்
ஒப்பரிய வீருள்ளி யோட்டுமே—இப்புவியில்
சம்பீர நற்கனியின் சாறுகுஞ் சுக்குமாம்
நம்பவுரைத் தோமிதனை நாம். (௧௧)

## நாபிக்கு மாற்று.

நாபிதின் றோருக்கு நற்சா கினிவேரை
மேவியே யரன்பானெய் விட்டரைத்துண்—ஆவினெய்யிற்
பன்றிவிர்ஷ்டைகொண்டரைத்துண்பன்னுகடுக்காய்க்குடிநீர்
என்றுமதை யோட்டு மியம்பு. (௧௨)

இயம்புபுத்ர சோகிவித்தை யேற்ற சுரைநெய்யில்
நயம்பெறநீ யுண்டிடவே நாட்டு—வயம்பெருகு [ப்
வெண்காரந்தன்னைமுன்னெய் விட்டரைத்துண்ணன்மிளகை
பண்மொழியா யுண்டிடநீ பார். (௧௩)

பார்முள்ளிக் காயளவு பைம்மீன் றசையரைத்துச்
சேர்சுரபி வெண்ணெயிட்டுத் தின்னப்போம்—வார்குழலாய்
ஆனமயிற் றுத்தத்தை யங்கனைப்பால் விட்டரைத்துத்
தானருந்தில் தீருமென்றே சாற்று. (௧௪)

## நெல்வேர்சர்க்கரைக்கு மாற்று.

சாற்றுவாய் நெல்வேருஞ் சர்க்கரையுங் கொண்டோர்க்கு
மாற்றெருக்க நல்லிலைச்சா றுமானே—ஆற்றவவ்
வேருடனெள் ளெண்ணெய்க்கு வீறு சுரையிலையாம்
பேரொலுமிச் சம்வேரைப் பேசு. (௧௫)

பேசிடுவாய் நெல்வேர்க்குப் பேய்ப்பீர்க்கின் வேரை
ஆசிலா நீர்விட்டே யட்டுண்பாய்—வீசுகின்ற
நண்ணுவிலா மிச்சம்வேர் நற்குடிநீர் தன்னையே
உண்ணப்போ மென்றே யுரை. (௧௬)

## தில்லைப்பாலுக்கு மாற்று.

உரைத்திடுவாய் தில்லைப்பா லூறுசெயின் மாதே
நரைக்கோவைச் சாற்றையுண்ண நன்றும்—விரைத்தவிளக்
கெண்ணெயுமாங் காரொருமை யின்கோ மயமாகும்
உண்ணெருமை மோரு முகந்து. (௧௭)

## வேர்க்கடலைக்கும், தேங்காய்க்கு மாற்று.

உகந்துநல் வேர்க்கடலை யுண்டோர்க்குச் சொல்வோம்
செகம்புகழுஞ் சீர்கன்னற் கட்டி—சுகம்பெறவே
தின்னப்போந் தேங்காயைத் தின்றோர்க்கு மீதேயாம்
பன்னுவாய் பச்சரிசி யாம். (௧௮)

## நெய்தேனுக்கு மாற்று.

ஆவின்னெய் நற்றே னளவு சரியாக
மேவியதை யுண்டால் விளம்பக்கேள்—தாவில்
இருந்தையை நீர்விட் டிளக வரைத்தே
அருந்தப்போ மென்றே யறை. (௧௯)

## கோழிமுட்டைக்கும், வாழைப்பழத்துக்கு மாற்று.

அறைந்திடுவாய் வாரணத்தி னண்டத்தின் வேகம்
சிறந்திடு முள்ளங்கி மூலத்தாற்—பறந்துவிடும்
வாழைக் கனியருந்தின் மாதே புகையிலையின்
கோழைக் குடிநீராக் கூறு. (௨௦)

### நல்லெண்ணெய்சோற்றுக்கும், வெற்றிலைச்சாறு நல்லெண்ணெய்க்கு மாற்று.

கூறுவா யெள்ளெண்ணெய் கூட்டியசாத் தேசோற்றை
வீறுட னுண் டாற்காடி வேகமதை—ஊறுசெயும்
வெற்றிலைச்சாறெள்ளெண்ணெய்மேவியுண்டோர்தங்களுக்கு
முற்றினதேங் காய்ப்பால் மொழி. (௨௧)

### கட்லை, துவரை, மொச்சைக்கும், நெய்க்கு மாற்று

மொழிகட்லை யாடகநன் மொச்சைமூன் றிற்கும்
வழுவறுசெம் மண்ணைநீர் வார்த்துப்—பழுதறவே
நன்றாக் கரைத்தருந்த நாடாது நெய்தனக்கு
நன்றுவான் பாலினையே நாட்டு. (௨௨)

### உளுந்துக்கு மாற்று.

நாட்டுவாய் மாடத்தை நன்றாகத் தின்றோர்க்குக்
கூட்டுவாய் கொள்ளுக்காய் வேளையின்வேர்—வாட்டமற
நன்மிளகு சீரகந்தே னுன்றுங் கலந்துநன்றாக்
கொன்விழியாய் காய்ச்சிக் கொடு. (௨௩)

### பலாப்பழத்துக்கும், பாலாடைக்குமாற்று.

கொடுப்பாய் வருக்கைக் கனியருந்திற் கோற்றேன்
தடிப்பார் நறுநெய்யுந் தானும்—அடுக்கான
பாலாடை தின்னின் பகர்புளித்த மோரதனை
வேலாம் விழியாய் விடு. (௨௪)

### கோதுமைக்கும், நல்லெண்ணெய்க்கு மாற்று.

விட்டிடுவாய் கோதுமைக்கு வெய்ய மிளகாயாம்
மட்டிலான் பானெய்யு மாகுமே—திட்டமுடன்
எள்ளெண்ணெ யுண்டா லெழிலுசற் பட்டைதனைக்
கொள்ளப்போ மென்றே குறி. (௨௫)

### கஞ்சாவுக்கு மாற்று.

குறித்திடுவாய் கோரக்கர் மூலிக்குச் சுக்கின்
வெறித்திடுநீ ருண்டால் விலகும்—நறைக்குழலாய்
சம்பீரச் சாருந் தனிக்கதலிப் பட்டையினீர்
உம்பரமு தொக்குமதை யுண். (௨௬)

### புகையிலைக்கு மாற்று.

உண்பாய் புகையிலையை யுட்கொள்ளி னல்லகத்திப்
பண்பான கீரைதின்னப் பாறுமே—நண்பாக
குறிஞ்சாவின் கீரையுள்ளி கூருநற் சீரம்
உரம்பெறவட் டுக்குடிநீ ரோட்டு. (௨௭)

## ஊனுங்கிழங்குக்கும், நாகக்கொட்டைக்கு மாற்று.

ஒட்டுமூ னுங்கிழங்கை யுண்டோர்க்கு வெள்ளையென
நாட்டுசங் கம்பழத்தின் சாற்றைநீ—மாட்டிடுவாய்
நாகக்கொட் டைக்குநீ நன்னீரிற் கொள்ளவாத்துத்
தோலகயே கொள்ளத் துணி. (௨௮)

## கர்ப்பூரத்துக்கு மாற்று.

துணித்திடுகர்ப் பூரத்தைச் சோர்விற்கொண் டோர்க்குப்
பணித்திடுவாய் சம்பீரச் சாற்றில்—கணித்தபலம்
நற்காசிக் கட்டிதனை நன்று யரைத்தெடுத்து
அற்கவான் மோரிலுண்பா யன்று. (௨௯)

## சிவனார்க்கிழங்குக்குமாற்று.

அன்று சிவனார்க் கிழங்கை யருந்திவிடின்
நன்றாய்ச்சுக் கின்குடிநீர் நாட்டுவாய்—ஒன்றுசுவை
வெள்ளரியின் வித்ததனை வெந்நீரி லேயரைத்துண்
ஒள்ளியநா வற்கொழுந்து முண். (௩௦)

## இலவன்பிசினுக்கும், சதுரக்கள்ளிப்பாலுக்குமாற்று.

உண்டக்கா னல்லிலவி னுண்பிசினை வெல்வதற்குத்
தண்டாச் சிவன்வேம்பைத் தானரைத்துண்—ஒண்டொடியே
கொள்ளப்போங் கள்ளியின்பால் கொண்டாலா வாரையிலை
மெள்ளவரைத் துண்ண விரும்பு. (௩௧)

## குன்றிமணிப்பருப்புக்கு மாற்று.

விருப்பான குன்றிவித்தை மேவியரைத் துண்டால்
பொரிக்காரந் தன்னைப் பொரித்து—விரைக்குழலாய்
வெந்நீரி லிட்டுண் விடத்தேரை வேரதனை
வெந்நீரி லிட்டுண் விரைந்து. (௩௨)

## மகிழம்பிஞ்சுக்கும், சோற்றிற்குமாற்று.

விரைமகிழம் பிஞ்சுவித்தை வெய்யசுண்ணந் தீட்டி
வரையினுத் தாமணிவேர் மாதே—அரைகொடுத்துக்
கொள்ளப்போ மேயமலை கொண்டோர்க்குச் சீரகமாம்
கொள்ளுக்காய் வேலைவேர் கொள். (௩௩)

## சோற்றிற்கும்,கொடிக்கள்ளிப்பாலுக்கு மாற்று.

கொள்வாய் புளிந்தயிருங் கூறமலைக் காங்கடுகும்
நள்ளாக் கொடிக்கள்ளி நாட்டுபால்—உள்ளாயின்
கோவைச்சா றுகுமே கோமளத்தின் கோமயமாம்
மாவைகு நாமமண்ணு மாம். (௩௪)

## கழுதை வண்டுக்குமாற்று.

ஆமே கழுதைவண்டிற் கம்புயத்தின் மூலத்தைத்
தேமேவு மாவின்பால் சேர்த்தரைத்துண்—போமே
அவரை யிலையை யரைத்துண்பாய் பாலில்
தவலரிய சிரகமுந் தான். (௩௫)

தான்கொடுப்பாய் வெண்சங்கின் தள்ளாவேர் தன்னைநீ
ஆன்பாலி லாட்டி யருந்திடவே—வானசத்தி
நற்சாறு மீவாய்நீ நல்லகரு வேலந்தோல்
விற்சாறு மீய விளம்பு. (௩௬)

விளம்பா யறைக்கிலா வேரையான் பாலில்
குளம்பா வரைத்துக் குடிக்க—வளப்பருத்தி
நீளிலைச்சா றுண்ணலா நேரவுரி வேராமே
ஆள்நா யுருவியுண்பா யாங்கு. (௩௭)

## கோடல்கிழங்குக்கும்,மிளகாய்க்குமாற்று.

ஆங்கோட லின்கிழங்கை யாற்றவுணி ணீலியின்வேர்
பாங்காவெந் நீரிற் பருகுவாய்—தேங்காமல்
கார மிகுந்த கடிமிளகாய் தின்றோர்க்குச்
சீர்கொத்து மல்லிநெய்யுஞ் சேர். (௩௮)

## பாதரசத்திற்கு மாற்று.

சேரிரதங் கொண்டோர்க்குச் செப்புவாய் வெண்சங்கின்
சாறுகும் காரவல்லிச் சாறுகும்—சீர்நீலி
நல்வேளை வெந்நீரில் நல்லசுண்டைக் காயளவு
மூந்நா ளருந்தல் முறை. (௩௯)

## சவ்வீரத்திற்கு மாற்று.

முறையாகச் சவ்வீர மொய்குழலாய் கொண்டால்
சிறுநெருஞ்சிற் சாறுண்ணத் தீரும்—அறையக்கேள்
நீலிவே ராகுமே நெய்ச்சிட்டிச் சாறுமே
பாலிதென்னங் கள்ளும் பகர். (௪௦)

## பூரத்துக்கு மாற்று.

பகருவாய் பூரத்தைப் பாங்குடன்தின் றோர்க்கு
இகலரிய குல்லையின்சா றீகத்—தகவுடைய
ஏரண்ட நெய்யா மெழிலவுரி வேராகும்
[illegible]கொண்ட பாகலிலை தேர். (௪௧)

### தாளகத்துக்கு மாற்று.

தேருவாய் தாளகத்தைத் தின்றோர்க்கு நீலியதன்
வேருடனே யாவிரம்பூ வெட்டிவேர்—சீரகமும்
மாதுளைவித் தோடுதென்னம் வன்குரும்பை காசினிவேர்
தீதகல நற்குடிநீர் செய். (௪௨)

### கந்தகத்துக்கு மாற்று.

செய்யகந்தி தின்றோர்க்குச் செப்புவா யாவிரம்வேர்
தய்வேளை வேர்நீல் தன்மூலம்—துய்யசுக்கு
நல்ல பருத்தியிலை நாகேசு ரஞ்சமனு
மல்லகுடி நீரட்டு வார். (௪௩)

வார்ப்பா யிளநீரில் வண்டா மரைவிதையை
சேர்ப்பா யரைத்துவடி நீருண்பாய்—கார்ப்பான
நன்மிளகு நீலியின்வேர் நற்சி ரகஞ்சமனு
மன்னீரிற் காய்ச்சியதை மாட்டு. (௪௪)

### மிருதாரசிங்கிக்கு மாற்று.

மாட்டுமிரு தாரசிங்கி மாதேயுண் டோருக்குக்
கூட்டுகுடி னைப்புன்கின் கோத்தோலை—வாட்டமற
நன்னீரி லேயரைத்து நன்றாய் வடித்துண்ணச்
சொன்னி யவுரியின்வேர்த் தூள். (௪௫)

### மயில்துத்தத்துக்கு மாற்று.

தூளா மயிற்றுத்தஞ் சோர்வுடனுண் டோர்கட்குத்
தாளான சம்பீரச் சாறுடனே—கேளாய்நீ
இஞ்சிநீர் தேனு_மிரும்பஞ்ச தாரையுடன்
கொஞ்சுமொழி யுண்ணக் கொடு. (௪௬)

### உப்புக்கு மாற்று.

கொடுப்பாய்நீ யுப்பிற்குக் குப்பைமே னிச்சா
றடுக்கான தாழைவிழு தின்னீர்—குடித்திடுவாய்
சிற்றம்மான் பச்சரிசி சீராகத் தின்னலாம்.
பொற்றொடியே சொல்வாய் புரிந்து. (௪௭)

### செம்பின்களிம்புக்கு மாற்று.

புரிந்திடுவாய் தாம்பிரத்தின் பொல்லாக் களிம்பை
அருந்திவிடி னமலகச் சாறுண்—பொருந்தவே
சம்பீர நற்பலத்தின் சாறுகு மேகியதன்
இம்புளித்த மோரொன் றிசை (௪௮)

## இருவங்கத்துக்கு மாற்று.

இசைப்யா யிருவங்கங் கொண்டோர்க்கு நல்ல
இசைப்பாங் கரும்பூ விலையைத்—தசைப்பார்
கருங்கோழி மாமிசமாங் காட்டுப் புளியரணை
நறுவேரா மென்றேநீ நாட்டு. (சகூ)

## கொடும்வலிக்கு மாற்று.

நாட்டாய் கொடுவேலி நல்வேர் தனக்குநீ
கூட்டாய் நறுநெய்யைக் கூசாமல்—வாட்டமிலா
மாட மளாத்ததனை மாதே திலநெய்யில்
போடு வடையாக்கிப் புசி. (ரு0)

## சேராங்கொட்டைக்கு மாற்று.

புசிப்பாய்நீ சேங்கொட்டை போற்றியுண் டோர்க்கு
இசைப்பா மெகிளத் திலையை—விசைப்பாக
நன்கு யிடித்தாற்றி னன்னீரி லேகலந்து
குன்றுமட் பாண்டத்திற் கூட்டு. (ருக)

கூட்டி யிளநீரின் கொண்டமேற் றேல்போக்கி
வாட்டமற முன்சொன்ன மாநீரில்—போட்டட்டு
நற்பருப்பை முன்றின்று நன்னீர்பின் னுண்டக்கால்
பொற்கொடியே போமென்றே யோர். (ருஉ )

## அரத்தபாளத்துக்கும், இடுமருந்துக்குமாற்று.

ஓரத்த பாளத்தை யுண்டார்க்கு மானேகேள்
பேராத்ளத நற்குடிநீர் பேசுவாய்—சிரா
இடுமருந்தைக் கொண்டோர்க் கியன்றகருஞ் செய்பை
இடுவிலைச் சாற்றைமாவி லீ. (ருங)

ஈவா யிடுமருந்திற் கேற்றபெரும் பூசுணிக்காய்
தாவாய்க் கடலையிட்டுத் தானட்டே—ஓவாமல்
ஐயவிகுய் நீக்கி யருந்துவாய் நீலியின்வேர்
மொய்குழலா யுண்ண மொழி. (ருச)

மொழிர்திடுவாய் செங்காஞ்சி மூதிலைச்சா றன்னைப்
பிழிந்தெடுத்து நெல்லவலிற் பெய்தே—செழுங்குழலாய்
தின்னப்போம் பச்சைச் சிசனிகையைத் தின்றுலும்போம்
ன்னமாய்ச் சொல்வா ... ர்த்து. (ருரு)

அளவைதெய்வத மாம்பொருளல்பொருள் காலம்
வளமதாகிய பொருள்களின்பலன்செயல் வகைகள்
விளையுநோய்வகை தீவகைபுடவகை விளக்க
அளவதாயுரைத் திடும்பொதுநூலிதென் றறைவார். (எ)

பண்டிதரியல்பு கூறல்.

பண்டிதன்பரி காரிநல்வைத்திய னெனப்பேர்
கொண்டவன்பர னருமப்பெயரினைக் கொண்டோர்
மண்டலத்தினி லாயுள்வேதந்தெரி மாந்தர்
எண்டிசைபுக ழெழுபிறப்பளவுமெண் கணராம். (அ)

வேறு.

தெய்வந்தன்னை வழிபடுசிந்தையும்
பொய்யிலாமொழியுநற் புலமையும்
ஐயமற்றவறிவும் பெருமையும்
வெய்யகோபம் வெறுப்புமிலாமையும். (௯)

உயிர்கண்மீது கிருபையுமோகையும்
செயிரகற்றிடு சிந்தையுமீகையும்
அயர்விலாமையு மன்புநிறைந்துளன்
உயர்வதாகிய வொப்பின்மருத்துவன் (௧௦)

வேறு.

நாடியாதியெண் குறிகளைநன்குற நோக்கல்
பாடதாகுமுந் நோய்களின்பேதத்தைப் பார்த்தல்
வீடுநோயெனின் தகுமருந்தெண்ணியே வியற்றல்
ஈடிலாமருந் தின்விலையீந்தபின் னீதல். (௧௧)

பொருளிலார்கணோய் தீப்பசிபனிப்பினைப் போக்க
அருளிலாமலே பொருளுடையோர்கள்பா லீட்டித்
தெருளுநன்மருந் தனைதுகில்தீதற வளித்தல்
மருளகற்றிடல் மருத்துவர்கடனென்பர் மன்னோ. (௧௨)

இருவர்வர்தமைத் திடினவரிற்புசா திருத்தல்
கருதுநற்சகு னத்தினைக்கண்டுசென் றிடுதல்
மருவுநோயினர் மஞ்சமாதியதொடா திருத்தல்
அருகுகீட்டிசை முகமுறவாசனத் திருத்தல். (௧௩)

கருமியேபிணி யாளனுமவன்கரம்பற்றின்
வருவதாந்தொடக் கென்றனர்மாற்றிடு வகைதான்
பெருநதீரினின் மும்முறைபெட்புற மூழ்கல்
தருகைதாள்கழல் தனாயின்மூவிரல்களைத் தட்டல். (௧௪)

மந்திரத்தினீர் தெளித்திடல்வத்திரங் களைதல்
அந்தமில்லதோராக்கி நேயக்குளி யாடல்
சுந்தரம்பெறு மஞ்சணீர்தெளித்திட ஞேமில்
இந்தநல்வகை யியற்றுதல்கடனென வியம்பாய். (௧௫)

ஆயதாய்தந்தை குருதெய்வமனைத்துநீ யென்றே
நேயமெய்ம்மையா மன்பொடுநிறைவுறு மனத்தின்
ஏயவெம்மருந் தாயினுமீந்ததைச் சுருதி
நாயகன்றரு வமுதமீதாமென நயந்தே. (௧௬)

உண்டுபத்தியஞ் சொற்றிடுமுறைப்படி யுஞற்றி
கொண்டநோய்த்திறம் படிறின்றிக்குறைவறக் கூறிக்
கண்டபோதெலா மொன்றதாக்கருதுவோர் தமக்கு
மண்டலம்புகழ் மருத்துவர்பண்டிதம் வகுக்க. (௧௭)

தந்தைதாய்முதற் றம்மனோர்க்குற்றநோய் போலச்
சிந்தைகொண்டுநாற் றிறத்தொடும்வைத்தியஞ் செய்க
முந்துநூலுணர் மூதறிவோரொடு முயங்கி
நந்தலின்றியே நன்மருந்தாதிய நயத்தல். (௧௮)

மாத்திரைக்கல்முதலிய இயல்பு கூறல்.

பகருமாத்திரைக் கல்லதோமாயனும் பண்பார்
நிகரிலிந்திர னிறைவனுங்குடிநனீ ரமுதாம்
தகவிலாதவை சாற்றும்வைகுந்தமாந் தாழ்வில்
இகலிலாவிரன் மூன்றுமும்மூர்த்தியா மென்பர். (௧௯)

அரைகன்மாயவன் றுயில்சொலுமமுதவா ரிதியாம்
உரமதாகிய குழவிமந்தரவரா யுயர்நீர்
வரைகொளோடதி மதிப்பவரதிதியின் மைந்தர்
திரையிற்றோன்றிய வமுதமேமருந்தெனச் செப்பாய் (௨௦)

கலுவத்தின் குணங் கூறல்.

கருமைசெம்மையதாகிய கற்களைக்கொண்டு
உரிமையாய்ச்செயுங்கலுவங்க ளுத்தமமாகும்
பெருமையாம்வெள்ளைக்கல்லினா லியற்றுகல்வமதோ
அருமையாமருந்தின்பல னத்தனையிலதே. (௨௧)

கலுவஞ்சுரண்டியின் குணங்கூறல்.

இருப்பினாற்கலுவஞ்சுரண்டிய பொருளியற்றின்
அருப்பினான்மருந்தின்குணஞ் சுருங்கிடுமுருக்கு
விருப்பதாகியவெள்ளியு முத்தமம்விருட்சம்
மருப்பினாற்புரிகருவியோ மத்திமகுணமாம். (௨௨)

### மண்டலநாள் வெருகடி அளவை கூறல்.

மண்டலம்மநு மண்மகனோராயில் வதியும்
நன்றதாகுநாள் நாற்பதின்மேலெந்தாய் நவில்வர்
கொண்டிடும்வெரு கடியதுமூவிரல் கொள்ளும்
பண்டமென்பதே யாமெனப்பகர்ந்தன ரன்றே (௨௩)

### மருந்துகொள்பாத்திரங்கூறல்.

வெள்ளிப்பாத்திர மருந்துணலாகுமே மேலா
விள்ளுசெம்பொனே மிகுபயனீயுமே மண்ணால்
கொள்ளுபாத்திர முத்தமங்கூறிய பொருட்கே
எள்ளுவெண்கல மத்திமமாமென விவசத்தார். (௨௪)

### மாத்திரைச்சிமிழ்கூறல்.

வெண்பொன்செம்பொனு லியற்றியசிமிழது மேலாம்
பண்பில்செம்பிலுஞ்சிறுளாம் பாணியின்மருந்து
உண்பதன்றுதெங்கின்சுரை யத்தமமரம்வெய்
நண்பதாவிலங்கின்மருப்பிவை நலஞ்சிறிதே. (௨௫)

### பேதிகொள்ளுங்காலமு மருந்துங்கூறல்.

கோடைகாலத்தின் விரேசன மெண்ணெய்நற்குடிநீர்
வாடைகாலத்திலவைகொளின் தேகவாதையதாம்
நாவெவாயுப்புவாள மாதியபொருணயந்த
ஈடிலாமருந்தெப் பொழுதும்பெறவியம்பே. (௨௬)

### பொருள்களின் நஞ்சுளவிபரங்கூறல்.

அசனிநஞ்சுளபொருள்களி தான்றியதாரும்
புறணிநஞ்சுளபொருள் சுண்டியிஞ்சிவெள்ளுள்ளி
தரணியுள்ளனவாகிய பொருள்களுக்கெல்லாம்
விரணஞ்செய்விடநீக்கிடு சுத்தியாம்விளம்பே. (௨௭)

### மூலமுதலிய கூறல்.

மூலங்கூறிடாப்பொருள்கள் சமூலமாம்வருத்துச்
சாலும்பாகமதறைத்திடாப் பொருள்சமபாகம்
காலங்கூறிடாமருந்துகொள் காலமுந்நாளாம்
ஏலப்பத்தியம்புகல்கிலாவிடி லிச்சாபத்யம். (௨௮)

### நாழிமுதலிய அளவைகூறல்.

ஆயுள்வேதியரறைந்தனர் நாழியினளவை
ஏயகாற்சதத்தொடியென வித்தொடிக்களவோ
தாயகுன்றிமூந்நூற்றறு பானெனத்தொகுத்தார்
ஆயநாழியென்னுவதே குறுணியினளவே. (௨௯

## மருந்துசெய்காலங் கூறல்.

கானத்துற்றநான்கோ டதிபலன்கொளுங்காலம்
தேனுகுத்திடுதைமதி யாதிமாசியதாம்
ஆனவம்மதிப்பாதியி னளவுமேயர்காள்
வானான்மருந்தினைநிகர் மருந்தியற்றிடுவாய். (௩௦)

## மருந்தின்வயது கூறல்.

வாளங்கூடியமாத்திரைக் காண்டதொன்றாகும்
நீளுமெண்ணெயின்வயது பன்னிருமதிநிகழ்த்தல்
கேளுலேகியங்கிருத மீராண்டெனக்கிளக்க
ஆளுநற்றைலத்தினுக் காண்டுமூன்றறைவாய். (௩௧)

நூறதாகுமே பற்பத்தின் வயததின் முக்கால்
வீறுசிந்தூர மாகுமே பதங்கமோர்பத்தாம்
தேறுநன்ற தாவுருக்கு மாத்திரை சதமடங்கல்
சேறுகின்ற நற்குழம்பு மோராைந் தெனச்செப்பாய். (௩௨)

## மாத்திரைகளின் பலன்கூறல்.

அரைப்பு மாத்திரைகாற் பலன்சுருக் சரைப்பலனும்
தருக்கிடும் புடமாத்திரை தான்முக்காற் பலனும்
உருக்குமாத் திரையுயர் புடமாத்திரைக் கொன்றும்
திருக்கறுத்திடுசிந்தூரம் பற்பமொன்றரையாம். (௩௩)

## தீயினளவும் பெயருங்கூறல்.

விளக்கையொத்திடு தீயதுதீபமாமேவிக்
குளத்தினம்புயப்பூ நிகர்தீகுளிர்கமலம்
தளத்தகன்னியின் பூநிகர் தீதளிர்கதலி
வளத்தகாட்டுறுதீயதே காடவன்னியதாம். (௩௪)

## புடவகை கூறல்.

ஆயிரம்வறட்டிகூடி நூனையின்புடமதாகும்
நேயமோடைம்பான்சேரி வீளனப்புடமாமென்பர்
ஆயவோராறுகூடி னறைவர்குக்குடமாமென்றே
தூயமூன்றாகின்மாதே சொல்லுவாய்காடையென்றே (௩௫)

## எருவினளவுமுதலிய கூறல்.

எருவினதகலஞ்சாண்மே லங்குலமூன்றதாகும்
பருமனேர்விரலதாகும் பகருவாயீரமற்ற
சுட்டியின்சாணமுன்னுஞ் சொன்மேதிச்சாணம்பின்னும்
விரவுசாணத்தாற்செய்த விவ்வெருக்கடையதாமே. (௩௬)

வனத்திடுவறட்டியிட்ட மருந்ததுசிறந்ததாகும்
கனத்தகாராட்டின்சாணங் கடுவேகமருந்திற்கியும்
மனைப்படுவறட்டியாலே மங்குமேமருந்தின்வேகம்
நினைத்திடாயமுகற்சாண நீக்குவாய்மருந்தினுக்கே. (௩எ)

## விறகின்குணமும் விதமுங்கூறல்.

### வெண்பா.

மெய்யாஞ் சரம்போக்கு மேலாங் கஷாயமதை
எய்யாமற் காய்ச்ச வெரிவிறகு—ஐயாகேள்
சீரான செவ்விலந்தை சிற்றமுட்டி யாவாரை
நேரான வூஞ்சலென்பாய் நீ. (௩அ)

வாதப் பிடிப்பதனை வாட்டுங் கஷாயமதைப்
போதப் புளிவேம்பு பூவரசு - மாதேகேள்
நல்லிலுப்பை யிவ்வைந்தி னுட்டு விறகிலொன்றில்
வல்லமையாக் காய்ச்சி வடி. (௩௯)

கூறும் விறகிலொன்றைக் கூட்டுவதே யல்லாமல்
வேறுவிற கைக்கலந்து மேவாதே—ஊறுசெயும்
தக்கவிற கைத்தெரிந்து தானெடுத்து வொவ்வொன்றே
எக்குடிநீர் கட்கு மிடு. (௪0)

பட்ட விறகிற் பயனில்லைப் பன்னுண்முன்
வெட்டும் விறகு மிகுபயனில்—திட்டமுடன்
பச்சை விறகு பயன்போக்கு மும்மதிமுன்
எச்ச விறகை யிடு. (௪௧)

வயிர விறகால் வளருமே வெப்பம்
செயிரான பட்டை தினவாக்கும்—உயிரீயும்
சாலியுமி நேர்மைதருஞ் சாற்றுஞ் சருகோசொல்
பாலமொழி யேபயனு மில். (௪௨)

சுட்ட கரியாற் சுரக்குமே யெப்பயனும்
தட்டும் வறட்டியினுற் றுன்பயனென்—இட்டமுறு
லேகியமெண் ணெய்கிருத நேர்த்தியா யோர்வருக்கம்
ஆகுவிற கானீ யடு. (௪௩)

## கஷாயத்தின்பிரிவு முதலியகூறல்.)

அடைகஷா யத்தி னளவுகாள்மூன்றதா மொருநாள்
இடுகஷாயத்தி னளவிருவேளையா மியம்பின்
படியிலொவ்வொரு வேளையுமடுவதே பாகம்
அடுகையோர்படி யட்டமத்தொன்றதா வருக்கல். (௪௪)

எவ்வகைக்குடி நீர்சட்ருமெட்டொன்ரு வருக்கல்
செவ்வையாமென்ப தியிடுமுறைவண முதற்றீ
எவ்வகீக்கிய சதலிதாமணாவிளக் கென்ப
நவ்விரோக்கிசீ ரருச்சலுமிம்முறை நாண்சே. (சரு)

## இச்சாபத்தியத்தில் நீக்கும்பொருள்கூறல்.

கடுகுநற்றிலத் தெண்ணெய்கூழ்ப் பாண்டங்கள் கடலை
வடுவதாகிய தெங்குமாவருக்கைநற் காயம்
மடிவிலாதவெள் ளுள்ளிகொள்புகையிலை மதுபெண்
இடருபாகலோ டகத்திநீக்கிடலிச்சா பத்பம். (சசு)

## ஷை ஆகும்பொருள்.

பருவரால்கருங் குறவைதேள்மீனினைப் பருகல்
உரியவுள்ளங்காட் டுப்புருசபிஞ்சலங் கலைமான்
பெரியவெள்ளையின் றசைபசும்பாலெனய்மோ ரிதலாம்
அரியசம்பிரப் பழத்தின்சாறருந்துத லாமே. (சஎ)

## மிதுகடும்பத்தியங்கூறல்.

கடுமைமிக்கிடு பத்தியமட்புதுக் கலத்தில்
அடுகைசெய்துண லுவரிநீர்புளிகிழ லவிர்கால்
படுகைமெய்யினி லிலாவகைபடுத்திட லுவர்மண்
தொடுகையாதிய நீக்குதலெனப்பலர் சொன்னார். (சஅ)

## கடும்பத்தியங்கூறல்.

கடுமையென்றிடு பத்தியமுவர்வறுத் துண்டல்
அடைவிலாமறு பத்தியத்துவர்வறுத் தருந்தல்
கொடுமைசெய்புளி தனைச்சுட்டுக்கூட்டிட லன்றிப்
படியில்கத்தரி பிச்சுருப்பிஞ்சினைப் பருகல் (சகூ)

மருந்துதின்றிடின் பத்தியம்வகுத்திடா விடினும்
அருந்தவாகிடாப் பொருள்களையகற்றவே வேண்டும்
பொருந்திடாதுபெண் போகமோர்மருந்துக்கும் புவியில்
வருந்துவோருட லறிந்துபத்தியந்தனை வகுப்பாய். (ரு0)

## பத்தியங்கொண்டோர் தூங்காக்காலங்கூறல்.

பத்தியங்கொண்டபேர்கள் பகற்றுயில்கொண்ட காலைச்
சித்திரபானுவெப்பஞ் செப்பிடுமருந்தின் வெப்பம்
பத்தியச்செயலின்வெப்பம் பகருநித்திரையின் வெப்பம்
இத்தனைவெப்பங்கூடி னியலுநோய்க்களவின் றென்னே. ( )

## மாந்தர்செய்யும்செயலும்செய்யாச்செயலுங்கூறல்.

நாளோர்நான்கினி னற்றலைமூழ்குதல்
நாளோரெட்டினி னன்மயிர்க்குதல்
நாளோரெட்டினி னங்கையைக்கூடுதல்
நாளோர்மூன்றினி னல்விழிமையிடல். (ருஉ)

நீணாச்சுண்டிடக் காய்ச்சிநெய்பட்டுணல்
மோரைநீரிற் பெருக்கிமுயங்குசல்
கூழைமாசு கொளாமலுடுத்திடல்
நேருநோயினர் நீர்மலநீக்குதல். (ருங)

இரவிலன்றிப் பகலுறங்காமையும்
விரவியுண்டபின் னீருணும்வேட்கையும்
பரவியுண்டுபப் பத்தடியேகலும்
உரமதாவிரு சாமமுறங்கலும். (ருச)

கந்தமன்றிபோர் கந்தமுறுமையும்
முந்துமாதர் தனமுயங்காமையும்
அந்தநாட்டயிரு மரம்பைக்கனி
பந்தமாகப் பருகலிலாமையும். (ருரு)

பகலின்மாதரைக் கூடுதலின்மையும்
இகலிநற்பசி யின்றியுணாமையும்
தகவில்வெண்ணெய் தனையருந்தாமையும்
மிகுயிளவெயின் மேவிபடாமையும். (ருசு)

இடக்கைகீழிட் டுறங்கன்முன்னுளினில்
அடுங்கறியையுண் ணாமைமுன்னுட்டவிர்
படுமமுதிஃ தென்னப்பருகிடல்
கொடுநற்பேதி மதிநான்கிற்கொண்டிடல். (ருஎ)

நாறுபூமொக ராமைநடுநிசி
வீறுமுண்டி யறுந்தருணத்தினைத்
தேறிப்பெண்களைக் கூடுதலின்மையும்
கூறிவெப்பொரு ளுண்டபின்னீருணல். (ருஅ)

எண்ணெயிட்டு வெந்நீரிலின்மூழ்கையும்
வண்ணவான்பான் மகிழ்ந்தினிதுண்டலும்
திண்ணமாமல நீரடக்காமையும்
பண்ணுபாக மழிபதநீக்கலும். (ருகூ)

பாரில்வையில் பகருமணலிலில்
சாரிக்கிளை தான்புரியானமையும்
நேரதாயிந் நியதிபுரிந்தவர்
பேறாச்கூறப் பெரும்பிணியாறுமே. (௬௦)

ஒன்றேர்போதினி லுண்டவன்யோகியாம்
நன்றதாயிரண் டுண்டவன்போகியாம்
தன்றுமூன்று பொழுதுண்டோன் ரோகியாம்
அன்றிமேலுண்டோ னும்பலரோகியே. (௬௧)

எண்ணெய்கொள்ளுநாள் முப்பதாமாண்டினு ளெண்ப
வண்ணலேகியங் கொள்வதமேலொரு பத்தாம்
திண்ணச்சிந்தூர மறுபதாமாண்டினுள் தின்கப்
பண்ணுபற்பநா ளைந்தின்மேற்பருகனு ருண்டே. (௬௨)

உண்பொருள்களின் சீரணகாலங்கூறல்.

பாரினின்மாந்தருண்ணும் பண்டமென்றுரைப்ப வெல்லாம்
சீரணமாகுங்காலந் தெளியவேசெப்பக் கேள்நீ
காரணரசமோரோமூ கன்னலாங்கற்கஞ்செய்நீர்
வீரணத்தண்ணீர்சாம மிளவெந்நீரண்டே சாமம். (௬௩)

சாலவேகாய்ச்சியாறுஞ் சலம்பதமூன்றே முக்கால்
சேல்நற்குடிநீர்மூன்று சிற்பழச்சாறே நாளும்
எலுஞ்சோதிரண்டுசாம மியன்றபாலிருபான் கன்னல்
பாலைநேர்மொழியாய்தேனே பன்னிருகடிகை யாமே. (௬௪)

வார்பெருந்தயிருஞ்சோறு மாள்கன்னல்பன்னொன்றும்
மோரிடுபதம்பன்மூன்று மொழிந்தபாலீரான்பாளும்
ஆருவச்சோறீரேழா மவிர்வெறுமமலையஃதே
பார்வெண்ணெய்ச்சோறோர்சாமம்பகர்ந்தமெல்லாஞ்சாமம்.

உளையிலைக்கறிதண்டாதி யுண்டிடிலொன்றுஞ்சாமம்
விளைகளும்பழத்தின்சாறும் வெந்திடிலோர்சாமந்தான்
உருசியாறுளவவற்றை யொளிர்பச்சையாத்தின்றாலும்
களையில்வெந்திடத்தின்றாலுஞ்சடிகையைந்ததன்மேலில்லை௬௬

காவிநேர்கண்ணாய்சொன்னேன் கழுகுநீர்காடிக்கைந்தாம்
மாவுண்டை பொங்கலப்ப மன்னியநெய்பாலான்மோர்
மேவியேகூட்டியுண்ணின் விளம்புவாயிருபான்கன்னல்
மாவடுவெருக்கைவாழை வளர்கன்னல்வசைக்குப்பத்தே. ௬௭

## ஆயுள்வேதப் பொதுலட்சணம்.

வர்த்திக்கும்வடித்தகஞ்சி வகைதனக்கரையோர்சாமம்
தித்திக்குந்தெங்குகன்னல் செழும்பனைவெல்லந்தின்னில்
உற்றிடுமிருபான்கன்ன லுயர்புழுக்கின்புழுக்கல்
சொற்றணமிரண்டுசாமஞ் சேர்வில்பச்சரிசிமூன்றே. (௬௮)

சூரணத்தயிலம்லேகங் கிருதம்பன்னிரண்டாங்கன்னல்
சீரியபழங்களெல்லாஞ் சீரணஞ்சாமந்தன்னில்
கூரியகறிகளெல்லாங் கூறிலோர்சாமமென்றே
சேருசிந்தூரம்பற்பஞ் சீரணமரைச்சாமத்தில். (௬௯)

இளநீர்சர்க்கரைபானக்க மெழுநாழிகையிற்செரிக்கும்
வளமுறுதயிரின்மேலும் வார்த்துணுமோரின்மேலும்
தெளிவுறுதண்ணீருண்ணச் செரித்திடுங்கடிகையைந்தில்
தெளியநற்பொரிமாநீருஞ் செரிக்குமோர்சாமந்தன்னில். ௭௦

சுட்டவெந்நீருண்பார்க்குச் சொல்லுவாய்சாமமென்றே
மட்டிலாதட்டவெந்நீர் வருக்கிலோர்சாமமாகும்
அட்டமாய்க்காய்ச்சியாறு மயிர்தண்ணீரிருபான்கன்னல்
வட்டவேல்விழியினாளே மருவுபாயசமீர்சாமம். (௭௧)

தருசெடிகொடிபூண்டாதி சாற்றுபூதழைகொழுந்து
அரிவையேயுண்ணிற்சாம மதனிற்சீரணமாஞ்சொன்ன
திரவியவகைகட்கெல்லாந் திருமிகுவேதஞ்சொன்ன
குருபரனடியைப்போற்றுங் குறுமுனியுரைத்தவாறே. (௭௨)

### பாண்டகுணங் கூறல்.

ஓர்மருந்து செய்பாண்ட மோர்மருந் திடற்கொருவல்
நேராகுமட் பாண்டமே சிறப்பெவற் றினுக்கும்
தேருவாய் தைலத் தினிற்கயத்திற்செய் பாத்ரம்
சேருலோ கத்திலீயம் பூசியகலன் சிறிதாம். (௭௩)

### முத்தருக் கூறல்.

உற்றவான்மரமுள் வைரம்முடைமரமாம்
சுற்றிநல்வயிரம் முளமரம்பெண் ணாச்சொல்ப
பற்றிடும்வயிரமிலா மரத்தினைப்பகரில்
நற்றவம்பெருவலியென நாட்டுவர்பெரியோர். (௭௪)

### மூந்நீர்கூறல்.

ஆற்றுநீர்பலதருக்கள் மண்படினஃததிகம்
ஊற்றுநீர்மண்ணின்குணமொன்றே யாதலினையாம்
தோற்றுநன்மழைநீரதே நீரதாமென்ப
சாற்றுவார்குணமிம்முறை யாமெனத்தானே. (௭௫)

## ஆயுள்வேதப்பொதுலட்சணம்.

### மும்மலர் கூறல்.

பூவதேபிஞ்சதாகிய மலர்கள்பூப்பிஞ்சாம்
பூவீன்றுடுபிஞ்சுள மலர் பிஞ்சுப்பூவாகும்
பூவதேயன்றிப்பிஞ்சிலா மலர்வெறும்பூவாம்
பூவினின் குணமூவகை யாமெனப்புகல்வர். (எசு)

### மும்மூலங் கூறல்.

வேரதேகிழங்கன்றி வேரல்லதுகிழங்காம்
வேரகத்திலும்வெளிப்புறங் கிழங்குவேர்க்கிழங்காம்
வேரதேயன்றிவேறில பொருள்கள்வேரொன்ப
வேரின்பேதமூன்றுமென விளம்பினர்புலவர். (எஎ)

### கொடிகளின்வகை கூறல்.

கொடிகளின்வகைபிரண்டெனக் கூறுவரவைதாம்
படியில்பற்றுகையில்லது சுற்றெனுங்கொடியாம்
ஒடியில்பற்றுகையுள்ளது பற்றெனுங்கொடியாம்
படியிலோடதிகொடிசெடி பூண்டுபன்மரமே. (எஅ)

### மூந்நோய் கூறல்.

சாத்தியம்மெனுநோயது வுடன்றணிவெய்தும்
சாத்தியம்மிலாநோயது வுடனுயிர்தணத்தும்
சாற்றும்யாப்பியநோயது சாருநாளளவும்
ஆற்றத்துன்பமேதருவதல் லறுவகலாதே. (எகூ)

### உறுப்பைப்பற்று நோய்கூறல்.

தோலைப்பற்றியேசார்ந்திடு நோயதேயென்றும்
ஏலுநற்றசைதனைப்பற்றி யியலுநோய்நரம்பின்
காலைப்பற்றியேபொருந்தநோய் மூளைபற்றியநோய்
வாலதாகியவெலும்பைப் பற்றியதெனவகுப்பார். (அ0)

மேலதாகியவங்கத்தைப் பற்றியேவிளங்கும்
ஏலதாமதோவங்கத்தைப் பற்றியேயியலும்
சாலமாமிருவங்கத்தைப் பற்றியேதுன்றும்
ஆலநேருநோய்மூவகை யாமெனவறைவர். (அக)

### பஞ்சாமலகங்கூறல்.

ஆமலகத்திலைந்து பேதங்களாமறைவோம்
தோமில்நெல்லிமாதுளை விளாசொற்பெறுமிலந்தை
நேமநல்லெலுமிச்சையோ டைவ்வகைநெறியாய்
ஆமதாம்பித்தமகலுமே யிவற்றின்பேரறையின். (அஉ)

## திரிகடுகு, திரிபலை, பஞ்சமூலங் கூறல்.

முக்கடுகவினிசுண்டி கதியெனமொழிபலாமே
தக்கமுப்பலைநற்றுன்றி சார்கடுநெல்லியென்ப
தொக்கவைம்மூலஞ்சுக்கு கொடுவேலியரத்தைசெவ்யம்
பக்குவமானகண்டு பரங்கியாம்பஞ்சமூலம். (அங)

## நோயில்லாதவர்களுக்கு நாடிக்குணங்கூறல்.

வாதநாடியும் வன்பித்தநாடியும்
சேதமுற்ற சிலேத்துமநாடியும்
ஓதமொன்று விரண்டுசாலோடிடில்
சேதஞ்செய்யும் பிணியறுதேகமே. (அச)

## நாடிபார்க்குங் காலங்கூறல்.

சித்திரைவைகாசிக்குச் செங்கதிருதயமாகும்
உத்தமவானியாடி யாரலைப்பசிகதிக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிமகரமாசி
அத்தமனத்தின்கால மாமெனவறைந்தார்மன்னே. (அரு)

பங்குனிமதிச்குநல்லோர் பகருமாவணிமதிக்கும்
பொங்கமாம்புரட்டாசிக்கும் புகல்நிசிநடுவிலென்றே
அங்கமாநாடிமூன்றுஞ் சோர்வறவிளங்குமென்று
இங்கிதமாகமுன்னோ ரியம்பியவாறதாமே. (அசு)

எண்ணெயிட்டிருக்கும்போது மீரமோடிருக்கும்போதும்
உண்ணுதல்செய்தபின்னு முயர்பசியுற்றபோதும்
திண்ணமாய்நடத்தலோடல் சிறந்தபோகஞ்செய்பின்னும்
கண்டுயில்கொண்டபோதுங் கலங்கிடுநாடிதானே. (அஎ)

## அஷ்டதானங்கூறல்.

அட்டமக்குறியாமென்ப ரங்கைகண்முகம்பன்னுக்கு
விட்டிடுமலநீர்தேகம் விளம்புமிவ்வுறப்போரொட்டாம்
இட்டமாநாடிபார்க்க வியம்புநூலறிந்துகொண்டு
மட்டிலாவியாதிபேத வகையினைத்தெளிகவன்றே. (அஅ)

ஆயுள்வேதப் பொதுலட்சணம்

முற்றிற்று.

சிவமயம்.

# திருமூலர்நாடியந்தாதி.

உற்றவிவர முறுதியாமெந்நந்தி
பற்றியமூலம் பகர்ந்திடுநாடிதான்
எற்றியேயெண்ணிடி னெழுபத்தீராயிரம்
மற்றதிற்பத்தும் வளமானநாடியே. (௧)

வளமானபத்தில் வழங்குதசவாயு
உளமாமிடபின்கலை சுழியென்றனர்
களமானசக்கரங் காட்டியதாறுண்டு
தளமானமண்டலந் தான்மூன்றுபாருமே. (௨)

பாருமிடகலை பின்கலைமாறியே
சாரும்பெருவிரற் காலொடுதானேறிக்
காருங்கழுத்திற் கபாலவரைநின்று
வாருமிடமா வலக்கரஞ்சாருமே. (௩)

வலக்கரந்தன்னில் வளமானபின்கலை
நிலைக்கவிடக்கர நின்றதிடகலை
துலக்கிடுமையஞ் சுழிமுனையோடிடும்
பிலக்கவிம்மூன்றாப் பிறந்ததுதாதுவே. (௪)

தாதுமுறையே தனியிடகலைவளி
போதறுபின்கலை புகன்றிடும்பித்தமாம்
மாதேசுழிமுனை வகுத்திடுமையமாம்
ஓதுமுறைபார்த் துணர்ந்தவர்சித்தராம். (௫)

உணர்ந்தவபான னுற்றிடும்வாயுவில்
புணர்ந்தபிராணன் புகும்பித்தந்தன்னிலே
அணைந்தசமான னடங்கிடுமைதனில்
இணைந்திவைமூன்றி னியன்றகுறிகேள். (௬)

குறியாண்வலக்கரங் குவிந்தபெருவிரல்
மறியாததன்கீழ் வைத்திடுமூவிரல்
பிறியாததற்சனி பேசியவாதமாம்
அறிவாய்நடுவிர லாமதுபித்தமே. (௭)

பித்தத்தின்கீழே பிறங்கிடலையமாம்
உற்றுநீபார்க்கி னோர்நாடியேயோடும்
பற்றியமூன்றும் பாயும்வேகத்தால்
மத்திமைத்தாளம் போல்வழங்கிடுமே. (௮)

## நாடியினளவு.

வழங்கியவாத மாத்திரையோரரை
சழங்கியபித்தந் தானொருமாத்திரை
அழுங்குங்கபந்தா னுகுங்காலோடிடின்
உழங்கியவுடலுக் கோர்குறையில்லை. (௯)

## நாடிநடை.

இல்லையேவாத மெழினடைகோழியாம்
எல்லையிற்பித்த மெழும்புந்தவளைபோல்
ஒல்லையேயைய மூர்ந்திடுபாம்புபோல்
வல்லையேகண்டறிந் தவர்கள்மாசித்தரே. (௧௦)

அறிந்திடுவாத மடக்குமலத்தினில்
பிறிந்திடுபித்தம் பேரஞ்சலத்தினில்
மறிந்திடுமையம் வளமானவிந்துவில்
உறைந்திடுமூன்றுக் குறவாந்தலமிதே. (௧௧)

உறவாங்கறுப்புஞ் சிவப்புமாம்வாதம்
திறமானபச்சை நிறங்கொடும்பித்தம்
நிறைவானவெண்மை நிறத்ததேயையமாம்
அறைதுவர்மூன்றி னவிர்தலங்கண்டே (௧௨)

தலங்காட்டியிந்தச் சடபஞ்சபூதம்
நிலங்காட்டிநீர்கால் நின்றதிகாட்டி
மலங்காமல்வான வெளிகாட்டியங்குக்
குலங்காட்டிநீங்காக் குடியிருந்தனவே. (௧௩)

இருந்தவிவ்வைந்தா லியன்றசரீரம்
பிரிந்தகற்றசையோ பிரிதிவின்கூறும்
சொரிந்திடுசோரிநீர் சொல்வரப்பென்றே
வருந்திடுவன்னி வளமாம்வெதுப்பே. (௧௪)

வெதுப்பதாக விடுப்பட்டுநாசியில்
எதிர்ப்புற்றுநிற்கு மென்பதாம்வாயு
கதுப்பொத்தவெல்லாங் ககனத்தின்சார்பால்
விதுப்புற்றுமேவும் விளம்பின்வளப்பமே. (௧௫)

வளப்பங்கேள் பூமி வாசிக்குநாசியில்
களப்பெருவன்னி தானூருங்கண்ணினில்
அளக்கருமப்போ வடங்கிடுநாவினில்
பளக்கறுகாலோ பரிசித்தியற்கும். (௧௬)

இங்கியல்காலி விருந்தூறங்குண்டலம்
பொங்கியவைந்தனுள் பொல்லாவிம்மூன்றுமே
தங்கியவாய்வு சழர்த்தன்மாவாதமாம்
பங்கியவன்னி பகுத்திடும்பித்தமே. (௧௭)

பகுத்தசலத்தில் பாரிக்குமேயையம்
வகுத்தவிம்மூன்றால் வளருநோயெல்லால்
அகக்கணூற்கண்டே யளவிட்டயோகிகள்
வகுத்தேயிம்மூன்றின் வளமறிவாரே. (௧௮)

வாதபித்தசேத்மகுணங் கூறல்.

அறியவிம்மூன்றி னளவையெக்கி
வறியநல்வாதம் வகுக்குங்குணங்கேள்
குறிகொளுங்கைகால் குளைச்சுநற்சந்து
பறிவுறவிலாவும் பச்சைப்புண்ணாமே. (௧௯)

புண்ணாவல்க்கும் பொருமும்வயிறதான்
தண்ணுமலத்தைத் தான்கட்டும்பின்னும்
ஒன்னாசகன முறிவேசுருக்கும்
பண்ணுங்குளிராம் பகுத்திடுவாயே. (௨௦)

பகுத்திடும்பித்தம் பலபலவெண்ணமாம்
வகுத்திடும்வாந்தியும் வாயினீருறலும்
தகித்திடுமேனியைத் தயங்கிடச்செய்யும்
மிகுத்திடுதவன விடமெனகைக்குமே. (௨௧)

விடங்கியவைய மேலிளைப்பேற்றிடும்
தடங்கியிருமித் தனிவிலாநொந்திடும்
அடங்காச்சுரமிகு மளவருகோழையாம்
இடங்கிரல்வற்றி யிரத்தமுங்கக்குமே. (௨௨)

கக்கியமூன்றின் கனத்தபலன்கேள்
ஒக்கியவாயு வுடலினிற்கூடிடில்
மிக்கபலனே மேவிநீரிற்படின்
சிக்கியநோயைச் சிறக்கவிளக்கும். (௨௩)

விளக்கியவன்னி வாய்வுடன்கூடின்
தளக்கியதாபச் சுரங்காணுந்தோஷமாம்
வளக்கியவப்பும் வன்னியுங்கூடிடிடின்
இளக்கியசீத சுரங்காணிதன்பேர். (உச)

## தோஷக்குறி.

பேரானதோஷம் பிறக்குமுறைகேள்
வாரானவாதமும் வன்னியுங்கறுப்பாம்
தாரானவையந் தானுறின்வெண்மையாம்
சேராதபித்தம் சிவந்திடுவாயுவில் (உரு)

வாயுவடங்கிடின் வளமுறுதோஷம்போம்
வாயுவெழும்பினன் மன்னுநீரொன்றிடும்
வாயுவுநீரும் வயங்கிடின்வன்னிசாம்
வாயுவுமாகாச மண்டலவோசையே. (உசு)

ஓசையிலேழு மோளியினிலோரைந்தும்
நாசியின்மூன்று நாவிலிரண்டுமே
தேசியுந்தேசனுஞ் சேர்ந்துபிரிந்திடும்
மாசிலாநந்தி மகிழ்ந்துரைத்தாரே. (உஎ)

## மரணக்குறிவருடமுதலியகூறல்.

உரைத்திட்டநாசி யுறுகுறிதனைக்கேள்
விரைததிட்டபின்கலை விடாதொருமூன்றுநாள்
இரைத்திடினண்டி னெய்தவன்றென்புலம்
பரத்திலிரண்டேல் பகரீராண்டெண். (உஅ)

எண்ணியொருநா ளியங்கிடிற்பின்கலை
தண்ணுமூவாண்டிற் றப்பாதுமாரணம்
ஒண்ணுபயத்தி லோடிடிற்பத்துநாள்
மண்மாதமாறினில் மாளுங்குறியிதே. (உகூ)

குறிமூக்கன்றியே குலவியவாய்வழி
உறுமெனின்மூன்நா ளுயர்பரமடைவான்
தெறிதருமூன்றுந் திரண்டுமிக்குறின்
பருவறுமரணம் பக்ஷந்தப்பாதே. (௩0)

தப்பாதுவாய்நீர்தான் தாக்கித்தன்மேல்வீழின்
ஒப்பாகத்தனுமற்றைய வொழிந்திடுவன்மதியாறில்
செப்பாகத்தானிருக்கச் சேர்ந்தநிழலலைந்திடினே
அப்பாகேளோராண்டி னறுங்சாணிகொண்டிடுவான்.()

கொண்டிடுதோஷக் குறிசொன்ணொங்ந்தி
தண்டுமுகடுதனிப் பல்லுநாக்கொன்றும்
மண்டிக்கறுத்து வயங்குமேயாமாயின்
ஒண்டிடுமாறுநா ளுறுதியாச்சாவானே. (௩௨)

உறுதியாய்ப்பித்த முடம்பிளைக்கச்செய்யின்
பொறையாகப்பாடைக்குப் போவான்மதியாறில்
அறுதியானமையகல் லத்தியுளரச்செய்யின்
உறுகிசேரோர்மதியி லொடுங்கிடுமேநற்சிவன். (௩௩)

சிவகலையாச் செழித்திடுநாடியில்
ஆவக்கரமவைத் திடினதேமேலேற்றும்
தாவொத்துமேனோக்கின் சாவாரொருநாளும்
யாவொத்துக்கீழ்நோக்கின் பதையாமற்சாவானே. ௩௪

பதைக்கின்றமுந்நாடி பாங்குவெருகியே
விதைக்கின்றவாதமும் பித்தமுநீங்கிடின்
சுதைக்கொண்டிருந்தாலுந் தோற்றியவுயிர்நீங்கும்
பதைக்கொள்ளிலபித்தம் பலக்கிலோசாவில்லை. (௩௫)

பித்தமடங்கிடிற் பேசாதொடுங்கிடும்
எத்தியவைய மெழும்பின்யமன்கையைப்
பற்றியீர்த்திடுவன் பகர்வாதமுற்றிடின்
சத்தியமாகச் சாவில்லைநீயறி. (௩௬)

அறிந்தவிம்மூன்று மடங்காமனின்றே
சிறந்துநடக்கின் செப்புவாய்சாவில்லை
பறிந்திடுநாடி பற்றிச்சிழோடிடின்
மறிந்தேயுயிர்தான் மறலிகைப்புகுமே. (௩௭)

புக்கியேபுந்தி பொருந்துகடைவிரல்
எக்கியுயர வெழும்பின்மகாசீதாஷம்
அக்கானவுந்தி யாதாரம்வாய்வுக்கு
வைக்குந்தலமென வகுந்தனர்தாதுவே. (௩௮)

தாதுநடக்குந் தனித்தலங்கேளுநீ
ஓதுகுதிகா லுயருந்திமார்புடன்
நீதில்கைம்மூலந் திகழ்சந்துகண்டம்
காதடியிருகரம் கவின்றுண்டம்பார்த்திடே (௩௯)

பார்க்கிற்றசநாடி பண்பாநடந்திடின்
தீர்க்கமாய்வாழ்வான் செப்புசெகெனின்
வார்க்குழலாளே மறலியுலகினைப்
பார்க்கத்துணிவான் பகரிடலுண்மையே. (௪௦)

உண்மையாம்வாதமும் பித்தமுமுற்றிடின்
திண்மையாம்பித்த சுரம்பிரநிடுமே
நண்ணியவையமும் நற்பித்தன்கூடிடின்
மண்ணில்வாழ்ப்வர்க்கு வருஞ்சீதசுரமே. (௪௧)

சுரமதாம்வாய்வுந் துயர்செயும்பித்தமும்
உரமாச்சரிவர வோடிடிற்றோஷமாம்.
திரமானவையமுஞ் சேர்பித்தமோர்கிறை
பரமாநடக்கின் பகருவாய்தோஷமே. (௪௨)

பகரிடுபித்தமும் வாதமுநேராய்த்
தருநடைசொள்ளின் தான்தோஷமாகுமே
உருமைபமோரரை யொன்றுகவாதமும்
செருபித்தமீரதாச் செறில்தோஷமாகுமே. (௪௩)

ஆகுமேபித்த மதிகமாய்வாதத்தில்
போகுமேயாயின் புத்திமயக்கிடும்
வேசமாகயைய மேலிடினுள்மூன்றில்
போகுமேசிவன் புகலுதென்னுலகினில். (௪௪)

உலகுளமாந்த ரொளிர்நாடிமூன்றும்
திகிலுறப்படபடப் பாகினற்சன்னியாம்
இகலுறுமையமிவ் விருநாடிகட்கும்
அகலநடக்கி நாளைந்தினிற்போகுவன். (௪௫)

போகுமேபித்தமும் வாதமுந்தாழ்ந்தே
சேகானவையஞ் சிறினமுந்நாளேயாம்
வாகானவாத மடிந்ததயமேனுக்கின்
ஏகுவான்கூற்றனூ றெண்ணைந்துகன்னலில் (௪௬)

எண்ணுவாரைய்யா விரும்பித்தமையமும்
நண்ணிடுமாயினுள் மூன்றிற்சாவதே
திண்ணமாம்பித்தமும் தெளிவாதமும்மை
வண்ணமாயோடிடின் மரணமோநாளைந்தில். (௫௰)

ஐபமெழும்பி யடங்கிடின்மற்றவை
வையகம்விட்டு வாழ்வன்மறலியூர்
செய்யவோர்நாளிற் சீறியவையம்
எய்யவொன்றேடி யமனுலகம்போம். (சஅ)

போதுமேவாதம் புளிப்பைமிகத்தரும்
பாசறுபித்தம் பகருந்திடுகசப்டாம்
தேகிடுமையங் தித்திப்புமீறிடும்
ஆகவவற்றி னளவுமீறிடினே. (சகூ)

மீறியவைய மேவுகுதிரைபோல்
பாறிலோர்நாளில் பறக்குமுயிரே
சீறியவாதமும் பித்தமுமையமும்
கூறுசரியாக் கூறிலைநாழிகை. (ருo)

நாழிகையென்று ணடிகீழ்நோக்கிடின்
வீழுவன்றேர்நாள் மேவியேவாதமும்
தாழ்வுறுபித்தமுந் தான்சரியாகி
வாழ்வறுமையம் மயங்கின்வானேறுவன். (ருக)

ஏறிடுநாடி யியல்பைநீகேளு
ஊறிடுசேத்தும முதயந்தனிலும்
மாறிடுபித்தம் வரும்பகல்தன்னிலும்
தேறிடுவாதஞ் சேர்மாலைப்போதிலும் (ருஉ)

போதினிற்றப்பிடிற் பொருந்தியநோயுறும்
மேதினிமாந்தர் மேவுமுந்நாடியால்
வாதையடையும் வகையிதுவாமென
ஓதினராயுள் வேதவேதியரே. (ருங)

திருமூலர்நாடியந்தாதி

முற்றுப்பெற்றது.

## சகலநஞ்சுக்கு மாற்று.

நயப்பான வெர்தயமு நல்ல கறியும்
வியப்பா யரைத்தேவெந் நீரில்—சயற்கண்ணாய்
வெண்ணெயுடன் கூட்டி விழுங்கப்போ மெவ்விஷமும்
உண்ணுவாய் சீன முவந்து. (௫௬)

துப்பாம் பொரிசாரந் துக்கிர்போ நீலியின்வேர்
தப்பாம லீக்குமென்றே சாற்றுவாய்—ஒப்பாய்முன்
சொன்னநஞ் சத்தனைக்குஞ் சொல்லுவாய் நீலியொன்றே
தின்னப்போ மென்றே தெளி. (௫௭)

## மாடு செப்பு நெருஞ்சில்தின்றால் மாற்று.

தெளிவா ... செப்பு நெருஞ்சிறனைத் தின்ற
ஒளிசேர் பசுவினுக்கோ வோமம்—அளிமிளகு
நல்லசத்தித் தோலுடனே நன்றா யரைத்திட்டால்
தொல்லை விடந்தொலையுஞ் சொல். (௫௮)

## ஷை அலரிப்பழுப்புக்கு மாற்று.

சொல்லலரி யின்பழுப்பைத் துய்த்த பசுவினுக்கு
வெல்லசத்திப் பட்டை விலக்குமே—அல்லல்செயும்
சோளப் பயிர்தின்னின் துய்யவுத் தாமணிவேர்த்
தாள்பூண்டு கொண்டுதுண்டத் தூது. (௫௯)

## ஷை மிளகாய்ப்பூண்டுக்கு மாற்று.

ஊதுமிள காய்ப்பூண்டை யுண்ட பசுவினுக்குத்
தீதில் மிளகுமஞ்சள் சீரோமம்—ஓதசத்திப்
பட்டை தனையிடித்துப் பாங்காய்க் கொடுத்துவிடின்
விட்டோடு மென்றே விளம்பு. (௬0)

## விஷப்பிரதி விஷத்திரட்டு முற்றிற்று.

---

இதனால் புண்ணியவான்களுக்கு வந்தனஞ்செய்து தெரிவிப்பதாவது இந்நூல் செய்தவர் பெயர்தெரியாமையால்விட்டனம். மேலும் இன்னும் சிலபாடல்கள் இருப்பதாகச்சிலர்சொல்லுகின்றனர். முடிமேன்முடிக்கிழங்கென்பதற்குப் பொருள்தெரியவில்லை. செய்தவர் பெயரும் மற்றபாடல்களும் அரும்பதங்களுக்குப்பொருளும் தெரிவிக்கவேண்டுமென்பதேயாம்.